
## திராவிடத்தால் வாழ்கிறோம்


1322

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# வரலாற்றை மறைக்கும் வக்கிரம்!



● சுகுணா திவாகர், எழுத்தாளர்

“வரலாற்றை அறிந்துகொள்ளாத சமூகம், வரலாற்றைப் படைக்க முடியாது” என்றார் அண்ணல் அம்பேத்கர்.

‘பார்ப்பனியம்’ என்னும் ஆதிக்கக் கருத்தியல், பௌத்தத்தின் வரலாற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து, அதன் சிறப்புமிக்கக் கூறுகளை உள்செரித்து, தன்னுடைய வரலாறாக முன்வைத்தது என்பதை அயோத்திதாசர் முதல் அம்பேத்கர் வரை விளக்கியுள்ளனர். சுதந்திரப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த வரலாறு கொண்ட இந்துத்துவவாதிகளோ இன்றுவரை காந்தியையும் நேருவையும் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படித்தான், விஜய் என்னும் முன்னாள் நடிகரின் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் வரலாற்றைச் சிதைக்கும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறது.

‘எமெர்ஜென்சி’ என்னும் ஜனநாயக விரோதச் செயற்பாட்டை எதிர்த்து சிறைச்சாலை சித்ரவதைகளை எதிர் கொண்ட மு.க.ஸ்டாலினை இழிவுபடுத்தும் வகையில், சட்டமன்றத்திலேயே ஒரு வக்கிரமான செயலைச் செய்தார், முதல மைச்சர் விஜய். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச்செயலாளர் பெ.சண்முகம் முதல் பல்வேறு எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகளின் கடுமையான கண்டனங்களுக்குப் பிறகு, ‘உள்நோக்கமில்லாமல் வெளிப்படுத்திய செய்கை’ என்று பின்வாங்கினார், விஜய். ஆனால் மீண்டும் சட்டமன்றத்தில், ஆதாரமில்லாத அருவெறுப்பான அவதூறைக் கட்டவிழ்த்துவிட்டார், சட்டத் துறை அமைச்சர் நிர்மல்குமார். ‘த.வெ.க. ஐ.டி விங்’ என்னும் ஆபாசக் கும்பலோ, தொடர்ந்து அருவெறுப்பான மொழியில் எழுதிக்கொண்டிருக்கிறது.

### த.வெ.க. வரலாறு என்ன?

‘எமெர்ஜென்சி கொடுமைகள்’ குறித்து, ‘சிட்டிபாபுவின் நாட்குறிப்பு’, ‘இஸ்மாயில் கமிஷன் அறிக்கை’, நீதிபதி சந்துரு, தோழர் தியாகு ஆகியோர் எழுதிய கட்டுரைகள் என்று ஏராளமான வரலாற்று ஆவணங்களை முன்வைத்து-எழுத்தாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள் இந்த அவதூறுகளை மறுத்தாலும், த.வெ.க. தொடர்ந்து அவதூறுகளை முன்வைத்து வருகிறது.

ஏனெனில், தமிழக வெற்றிக்கழகத்துக்கு என்று உயரிய அரசியல் இலட்சியங்களோ, போராட்ட வரலாறோ, தியாக வாழ்க்கையோ இல்லை. விஜய் மற்றும் த.வெ.க.வினருக்கு இருக்கும் ‘வரலாறு’ என்ன?

கட்சி ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளில்.. விஜய், மக்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்தது கிடையாது. மக்கள் பிரச்சினைகளுக்காக குரல்கொடுத்தது கிடையாது. தேர்தல் பிரச்சாரங்களைக்கூட முறையாகச் செய்தது கிடையாது. கரூரில் 41 பேர் இறந்தபோது, பின்னங்கால் பிடரியில் தெறிக்க ஓடிப்போன ‘வரலாறு’ கொண்டவர்தான் விஜய். அவர் மட்டுமல்ல, த.வெ.க. என்னும் ஒட்டுமொத்தக் கட்சியுமே தலைமறைவானது. அரசின் அடக்குமுறை காரணமாகப் பல புரட்சிகர கட்சிகள் தலைமறைவாகியுள்ளன. ஆனால், தன்னால் நிகழ்ந்த கொடூர சம்பவத்தை எதிர்கொள்ள முடியாமல் கோழைத்தனமாகத் தலைமறைவான தலைவர், விஜய்தான்; தலைமறைவான கட்சி த.வெ.க.தான்.

த.வெ.க. அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வுக்கோ, வழக்குக்குப் பயந்து, ஓர் அவதூறுப் பதிவை அவசர அவசரமாக அழித்த ‘வரலாறு’தான் உண்டு. ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., அ.தி.மு.க., த.வெ.க., எதிர்காலத்தில் எந்தக் கட்சி என்று தெரியாத ‘பல கட்சிப் பயணி’ நிர்மல்குமாருக்கோ ராகுல் காந்தி முதல் ஹத்ராஸ் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் வரை, அவதூறுகளை அள்ளித்தெளித்த அசிங்கமான வரலாறுதான் இருக்கிறது.

### த.வெ.க. முரண்பாடுகளின் மூட்டை

அம்பேத்கரையும் பெரியாரையும் கொள்கைத் தலைவர் என்பார்கள். கட்சிக்கு பெயர் வைத்தவரே ஜோதிடர்தான். சிவப்புத் துண்டைக் கழற்றாத முன்னாள் கம்யூனிஸ்ட் சி.மகேந்திரன், ஜெயலலிதா புகைப்படத்தை பாக்கெட்டில் வைத்துத் திரியும் செங்கோட்டையன், சாதிப்பெயரைப் போட்டுக்கொள்ளும் கம்பம் த.வெ.க. எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, எம்.எல்.ஏ. ஆன ஜோதிடர் கனிமொழி, சுதந்திர தின விழாவில் தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்த மறுக்கும் சங்கி அமைச்சர் நிர்மல்குமார் என்று, முரண்பாடுகளின் மூட்டையான த.வெ.க.வுக்கு என்ன வரலாறு இருக்கிறது? அதனால்தான், இருக்கும் வரலாற்றை இழிவுபடுத்தப்பார்க்கிறார்கள்.

சரி, இந்த வரலாற்றை அழித்துவிட்டு, இவர்கள் எதைக்கொண்டு நிரப்பப்போகிறார்கள்? பொய்களையும் போலி பிம்பங்களையும் இட்டு நிரப்புவதே இவர்களின் ஆபத்தான செயல்திட்டம்.

யானை மாலை போட்டு அரசனாக்கியதைப்போல், எந்தக் கொள்கையும் எந்த வித உழைப்பும் இல்லாத விஜய், முதலமைச்சராகிவிட்டார். ‘தினமும் அலுவலகத்தில் 9-5 மணிவரை பணிபுரிகிறார். மதிய உணவையும் எடுத்துவந்துவிடுகிறார்’ என்ற பிம்பத்தைக் கட்டமைத்தார்கள். ஆனால், சட்டமன்றத்தில் விஜய்யின் கீழ் உள்ள 18 துறைகள் தொடர்பான சட்டமன்ற உறுப்பினர்களின் எந்தக் கேள்விக்கும் அவர் பதில் சொல்லவில்லை.

துணிச்சலும் தன்னம்பிக்கையும் நிர்வாகத் திறமையும் ஆளுமைத்திறனும் இல்லாத விஜய், சினிமாத்தனமான பிம்பங்களின் மூலமே அதைச் சரிக்கட்டப் பார்க்கிறார். வாரம் ஒருமுறை ‘ஆய்வு’ என்ற பெயரில், ‘ரீல்ஸ்’ போட்டால் போதும், மக்களைத் திருப்திப்படுத்திவிடலாம் என்று பிம்பங்களை வாரிக்கொட்டுகிறார். ஊடகங்களோ, ரசிகர் மன்றங்கள் கட்-அவுட்டுக்குப் பாலாபிஷேகம் செய்யும் தொனியில் செய்திகளை வெளியிடுகின்றன.

சட்டமன்றத்தில் நான்கு அமைச்சர்களே பதில் அளிக்க, அதுவும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி ஆதாரமற்ற அவதூறுகளையும் தப்பும் தவறுமான பதில்களையே அளிக்க, முதலமைச்சர் விஜய்யோ, ‘டம்மி முதலமைச்சராக’ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறார். கடைசி நாளில், ஒரு சினிமாத்தனமான செய்கையை நிகழ்த்தி சமாளிக்கிறார். எல்லாமே கட்டமைக்கப்பட்ட திரைக்கதையாக இருக்கிறது.

சட்டமன்றத்தில் அவை மரபை மீறி, விஜய் செய்த ‘ஆக்‌ஷன்’ கடும் கண்டனங்களுக்கு உள்ளானது. ஆனால், அதைத் தன் கடைசிப் படத்தின் டைட்டில் கார்டில் போட்டு, சட்டமன்றத்தை ஷூட்டிங் ஸ்பாட் ஆக்கினார். இப்போதோ, முதலீடுகளை ஈர்க்கிறேன் என்று லண்டன் போய், நடிகர் அஜித்தின் கார் ரேஸைத் தொடங்கி வைத்து, அங்கேயும் சினிமாத்தனமான ஆக்‌ஷன்களைச் செய்து, அதைத் தொகுத்து டீஸராகவும் வெளியிட்டுவிட்டார். பெயருக்கு, ஏற்கெனவே தி.மு.க. அரசால் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்ட திட்டங்கள், அதுவும் உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலுவகத்துக்கு லண்டனில் ஒப்பந்தம் போட்டு, ‘முதலீடு ஈர்ப்பு’ என்று கணக்குக் காட்டிவிட்டார்.

### நான்கு மாத ஆட்சி – திரைக்கதைக் காட்சிகள்தான்

விஜய்யின் நான்கு மாத ஆட்சி என்பவை, திரைக்கதைக் காட்சிகள்தான். தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் பாவம், பார்வையாளர்களாக மாற்றப்பட்டுவிட்டார்கள்.

இன்னொருபுறம், ‘விஜய் ஆட்சியில் பாலியல் குற்றவாளிகளுக்கு விசாரணையின்றி மரண தண்டனை’, ‘ஜியோ நெட்வொர்க் ரீசார்ஜ் கட்டணத்தை ஏற்றினால் செல்போன் டவர்களைத் தமிழ்நாட்டில் இருந்து அகற்றிவிடுவேன் என்று அம்பானியை எச்சரித்துவிட்டார்’, ‘தன் சொத்துகளை விற்றுத்தான் மக்களுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்றிவருகிறார்’ என்று கோடிக்கணக்கில் பணம் கொட்டப்பட்டு, பொய்யான ரீல்கள் உருவாக்கப்படுகின்றன.

பொய்களைப் பரப்பி, வலதுசாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை, *‘Post-Truth Era’* என்று வர்ணிக்கிறார்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள். நோம் சாம்ஸ்கி போன்ற அறிவுஜீவிகள் இதுகுறித்து விரிவாக எழுதியிருக்கிறார்கள். டொனால்ட் டிரம்ப் இப்படிப் பொய்களின்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார் என்றால், இந்தியாவில் நரேந்திர மோடி, தமிழ்நாட்டில் விஜய், அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சியையே ஒழுங்காக நடத்த முடியாத விஜய், பொய்ச்செய்திகளின் மூலம் பிரதமர் பதவியைக் கைப்பற்றத் துடிப்பது வேடிக்கையானது.

வரலாற்று உண்மைகளை முன்வைப்பதும் சமகால அவதூறுகளை முறியடிப்பதும் பொய்ச்செய்திகளின் அபாயத்தை மக்களுக்கு உணர்த்துவதுமே, இன்று நம் முதன்மையான கடமைகள். ■

**டொனால்ட் டிரம்ப் இப்படிப் பொய்களின்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார் என்றால், இந்தியாவில் நரேந்திர மோடி, தமிழ்நாட்டில் விஜய், அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.**

## குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்!

பிரபல தனியார் தொலைக்காட்சியில், ‘ரியாலிட்டி ஷோ’ ஒன்றைத் தொகுத்து வழங்கும், தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர் விஜய்சேதுபதி, தலைமைப் பண்பு குறித்துக் கூறிய கருத்து வைரலாகி உள்ளது.

“தலைவர் என்றால் என்னவென்று தெரியாமல், தலைமையின் பொறுப்பை உணராமல், வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்துவிட்டு, பிரச்சினைகள் வரும்போது... எதிர் அணிமீது பழிபோட்டு ஓடுவது, தலைமைப் பண்புக்கான தகுதி கிடையாது. அது ஏமாற்று வேலை” என்று அவர் கூறினார்.

அந்த நிகழ்ச்சி சார்ந்து மட்டுமே கூறிய கருத்து இது. விஜய் சேதுபதி, தனது பேச்சில் எந்த அரசியல் கட்சியையோ அல்லது தலைவரையோ குறிப்பிட்டு இதனைச் சொல்லவில்லை. ஆனால், தமிழக வெற்றிக் கழகத்தினர், இது தங்கள் தலைவரான விஜய் மீது திட்டமிட்டு வைக்கப்பட்ட விமர்சனம் என்று, சமூக வலைதளங்களில் கடித்துக் குதறி வருகின்றனர். விஜய் சேதுபதி குறித்து, தனிப்பட்ட முறையிலும் தரம் தாழ்ந்த பதிவுகளை இட்டு, அவருக்குப் பகிரங்க மிரட்டல் விடுத்துவருகின்றனர்.

த.வெ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களே இத்தகைய மிரட்டல் விடும் போக்கைக் கையாள்வது, கருத்துச் சுதந்திரம் தமிழ்நாட்டில் பல்லிளிப்பதை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. கடந்த காலங்களில், இதே நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய மாநிலங்களவை உறுப்பினர் நடிகர் கமல்ஹாசன் அவர்கள், வெளிப்படையாக அரசியல் கருத்துகளைப் பேசியிருக்கிறார். அவருக்கு இதுபோல மிரட்டலோ, எச்சரிக்கையோ விடப்பட்டது கிடையாது. ஆனால், இன்றைக்கு விஜய் சேதுபதி மீதான சமூக ஊடகத் தாக்குதல்கள், ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோதப்போக்குக்கு உதாரணமாக உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் தந்தையார்!



எஸ்.கண்மணி

என் தந்தையார் திருப்பத்தூர் கோ.சண்முகம், கழகத்தின் ‘முரட்டு பக்தர்’ என கலைஞரால் பாராட்டப்பட்டவர். 1988-ஆம் ஆண்டு, அவர் திருப்பத்தூர் நகரச் செயலாளராக இருந்தபோது, திருப்பத்தூரில் தேர்தல் நிதியளிப்புக் கழகக் கூட்டத்தை ஏற்பாடுசெய்து, தலைவரிடம் தேர்தல் நிதி அளித்தபோது எடுத்த படம். அன்றைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டச் செயலாளர், அண்ணன் முகமது சகி அவர்களும் இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ளார். தந்தையார், 1996-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலைவரிடம் நன்மதிப்பைப் பெற்றவர். அவரது அடியொற்றி, கழகமே குடும்பமாக வாழ்ந்துவருவதைப் பெருமையாக உணர்கிறோம்!

**– எஸ்.கண்மணி, மாவட்ட மகளிர் தொண்டர் அணித் தலைவர், திருப்பத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கல்வியின் இலக்கு!

1967-ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை, ‘சாமானிய மக்கள், பட்டதாரிகளின் சமூகப் பொறுப்பு, ஜனநாயகம் ஆகிய மூன்று மையக் கருத்துகளில் இருந்தது. பல்கலைக்கழகங்கள், மன்னர்களுக்கும் மாளிகைவாசிகளுக்கும் அறிவாளிகளை உருவாக்கிய காலம் மாறி, சாமானிய மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் பணியில் ஈடுபடவேண்டிய காலம் வந்துவிட்டது’ என்றார். கல்வியின் இலக்கு, யாருக்காக இருக்க வேண்டும் என்பதற்கான அண்ணாவின் சமூகப் பார்வையே, கழக ஆட்சிகளில் எதிரொலித்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900